பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 28 (10—5—58) வெள்ளி ★ வெளியூர்: சித்திரை 29 (11—5—68) சனி [இதழ்: 273

சூலை 9-ல்

அண்ணாவுக்கு 'டாக்டர்' பட்டம்

சிதம்பரம், மே 9—

குடியரசுத் தலைவர் டாக்டர் ஜ கிர் உசேன் அவர்கட்கும், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கட்கும் 'டாக்டர்' பட்டம் அளிக்கும் பொருட்டு, சூலை 9-ம் நாள் இதற்கென தனிப் பட்டமளிப்பு விழாவினை நடத்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முடிவு செய்திருக்கிறது.

சிங்கப்பூருக்கு அண்ணா புறப்பாடு

ஞாயிறன்று சென்னை வருகை-சிறப்பான வரவேற்பு ஏற்பாடு

டோக்யோ, மே 10—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஜப்பானில் தமது ஐந்து நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு இன்று சிங்கப்பூருக்குப் புறப்பட்டார்.

நேற்று, ஜப்பானின் பழைய தலைநகரான கியோட்டோவுக்குச் சென்று அங்கு பழம்பெருமை வாய்ந்த கலாசார—வரலாற்றுச் சின்னங்களையெல்லாம் பார்வையிட்டார்.

இன்று, ஓசாகாவிலிருந்து ஹாங்காங்குச் சென்றுவிட்டு அங்கிருந்து சிங்கப்பூர் செல்கிறார்.

சிங்கப்பூரிலிருந்து மே 12 (ஞாயிறு) இரவு 10 மணியளவில் விமானம் மூலம் சென்னை அடைவார்.

சென்னையில் வரவேற்பு

அண்ணா அவர்களை வரவேற்க சென்னையில் மகத்தான ஏற்பாடுகள நடைபெறுகின்றன.

மே 13—திங்கட்கிழமை மாலை, அண்ணா அவர்கள், தேனாம்பேட்டை 'அன்பக'த்திலிருந்து ஊர்வலமாக அழைத்துவரப்படுவார்கள்.

இந்த வரவேற்பு ஊர்வலம், மவுண்ட் ரோடு வழியாக திருவல்லிக்கேணிக் கடற்கரையை அடையும்.

கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் அமைச்சர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும், மாவட்டச் செயலாளர்களும் கலந்துகொண்டு வரவேற்புரை வழங்குவர்.

எலி வளையிலிருந்து 22 மரக்கால் நெல்!

இரண்டு வாரத்தில் 8 இலட்சம் எலிகள் வேட்டை!

தஞ்சாவூர், மே 10—

தஞ்சை மாவட்டத்தில் ஏட்ரல் 15-ஆம் நாளுடன் முடிவடைந்த இரண்டு வார கால எலி ஒழிப்பு இயக்கம் கணிசமான வெற்றிபெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அந்த இரண்டு வார காலத்தில் கிட்டத்தட்ட 8-இலட்சம் எலிகள் வேட்டையாடப்பட்டிருக்கின்றன.

இந்தத் தகவலை, தீவிரச் சாகுபடித் திட்ட விளம்பர அதிகாரி திரு. இராமாநுசம் இன்று தெரிவித்தார்.

திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பூசலாங்குடியில் வயலில் 'வெட்டு' வெட்டும்போது ஒரு வளைக்குள் 22 மரக்கால் நெல் எலிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டதாம். அந்த ஒரு வளையிலிருந்து மட்டும் 32 பெரிய எலிகள் பிடிக்கப்பட்டனவாம். (24 மரக்கால் கொண்டது ஒரு மூட்டையாகும்.)

இதேபோல், வலங்கைமான் வட்டாரத்தில்உள்ள ஆவூர் என்னும் கிராமத்தில் எலி வளைகளைத் தோண்டிப் பார்த்தபோது ஒரு பெரிய வளையிலிருந்து 18 மரக்கால் நெல் கிடைத்ததாம்; அதிலிருந்து 30 எலிகள் பிடிக்கப்பட்டன.

அந்த ஒரு கிராமத்தில் மட்டும் 20,000 எலிகள் வேட்டையாடப்பட்டன.

அரிசி பங்கீடு நிரந்தர ஏற்பாடு அல்ல!

தன்னிறைவு ஏற்படும் நாளே நமக்கு வெற்றி நாள்!

குடும்பக் கார்டு விரிவு விழாவில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் விளக்கம்

வாணியம்பாடி, மே 9 —

"ரேஷனும், குடும்பக் கார்டு முறையும் நிரந்தரமான ஏற்பாடு அல்ல -- பஞ்சத்தையும், விலைவாசி ஏற்றத்தையும் கட்டுப்படுத்தும் ஒரு தடுப்புச் சுவர்தான்!

"உணவுத் துறையில் தன்னிறைவு அடைவதற்குத் தமிழக அரசு பெருமுயற்சி எடுத்திருக்கிறது; என்றைக்கு நாட்டில் உணவுத் துறையில் தன்னிறைவு ஏற்படுகிறதோ, அந்த நாள்தான் வெற்றி நாளாகும்!"

இவ்வாறு, உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், வடாற்காடு மாவட்டத்தில் மூன்று இடங்களில் குடும்பக் கார்டு திட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வட ஆற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மூன்று நகராட்சி நகரங்களிலும் வாழும் ஒன்றேகால் இலட்சம் மக்களுக்குக் குடும்பக் கார்டு திட்டத்தின் பயன் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இம்மூன்று இடங்களிலும் உணவமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள், திட்டத்தைத் துவக்கி வைத்தார்.

உணவுத் துறைச் செயலாளர் திரு. கே. திரவியம் தலைமைவகித்தார்.

இந்நிகழ்ச்சியில், முல்லை வடிவேலு, சி. கே. சின்னராசு எம்.எல்.ஏ., வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் செல்லியப்பா ஆகியோர் கலந்துகொண்டு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

மேலவை உறுப்பினர் எண்ணிக்கைஉயரும்

தமிழக அரசின் யோசனைக்கு டெல்லி இசைவு

சென்னை, மே 9—

"தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 63-ஆக இருப்பதை 78-ஆக உயர்த்த வேண்டும்"

என்று தமிழக அரசு தெரிவித்த யோசனையை, மத்திய அரசு ஏற்றுக் கொண்டுவிட்டதாகத் தெரிய வருகிறது.

சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 204-ஆக இருந்துவந்திருப்பது 234-ஆக அதிகரித்துள்ளதால், மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை மேற்கூறியவாறு உயர்த்த வேண்டும் என்று தமிழக அரசு யோசனை கூறியது.

தமிழக அரசின் இந்த யோசனையைச் செயல்படுத்துவதற்கு அவசியமான சட்டத்தை மத்திய அரசு நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடரில் இயற்றக்கூடும்.

அண்ணாவின் சுற்றுப்பயணச் செலவுகள்

அழைத்திருந்த நாடுகளே ஏற்றுக் கொண்டன

நாடாளுமன்ற கேள்விகட்கு தலைமையமைச்சர் தந்த பதில்

புதுடில்லி, மே 9—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் குறித்து நாடாளுமன்ற மேலவையில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

கேள்விகட்குப் பதிலளிக்கும் வகையில் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்ததாவது:—

"தமிழக முதலமைச்சர் அமெரிக்க நாட்டு அரசினால் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்ய அழைக்கப்பட்டார். அதேபோல் ஜப்பான் நாட்டு அரசினாலும் அவர் அழைக்கப்பட்டிருந்தார். அவருடைய சுற்றுப் பயணச் செலவு முழுவதையும் அந்த அரசுகளே ஏற்றுக் கொண்டன.

"திரு. அண்ணாதுரைக்கு அழைப்பு அனுப்புவதற்கு முன்னால் தொடர்புடைய அரசுகள் இந்திய அரசின் ஒப்புதலைப் பெற்றுள்ளன.

"அழைப்பை ஏற்ற திரு. அண்ணாதுரையும் தமது சுற்றுப் பயண விவரத்தைத் தலைமையமைச்சருக்குத் தெரிவித்தார். உடனே வெளிநாடுகளில் உள்ள நமது தூதுவரகங்களுக்கு அண்ணாதுரையின் சுற்றுப்பயணத்தின்போது அவருக்குத் தகுந்தபடி உதவுமாறு இந்திய அரசின் உள்துறை தெரிவித்தது.

"இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கை குறித்தும், திரு. அண்ணாதுரைக்குத் தெரிவிக்கப்பட்டது."

தவறைச் சுட்டிக்காட்ட இயலாததால் தாறுமாருகத் தாக்கிப் பேசுகிறார்கள்!

பொறுத்துக்கொண்டதால்தான் தமிழகத்தின் ஆட்சியை ஏற்றிருக்கிறோம்

பேராசிரியர் அன்பழகனுக்கு கார் பரிசளிப்பு விழா--- அமைச்சர் மு. கருணாநிதி உரை

"தவறுகள் எதனையும் சுட்டிக்காட்ட இயலாததால், தனிப்பட்ட முறையில் காங்கிரசார் நம்மைத் தாக்கிப் பேசுகின்றனர்!

"இதனால் கழகம் அழிந்துவிடாது - வளரும் — வளர்ந்து கொண்டேதான் இருக்கும்!

"பொறுத்திருந்தோம்; இன்று தமிழகத்தின் ஆட்சியை ஏற்றிருக்கிறோம்! இன்னும் பொறுத்திருப்போம்— பெரிய பூமியை ஆளுவோம்!"

இவ்வாறு பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், நாடாளுமன்ற மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் க. அன்பழகன் அவர்களுக்குத் திருச்செங்கோடு தொகுதி மக்கள் சார்பில் அளிக்கப்பட்ட கார் பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

முதியவர் ஜி பி. சோமசுந்தரம் எம்.பி. தலைமையில் நடைபெற்ற இந்தக் கார் பரிசளிப்பு விழா, கடந்த புதனன்று, நாமக்கல் திரு. வி. க. பாறையில் நடைபெற்றது

அமைச்சர் மு கருணாநிதி அவர்கள், கார் சாவியை அன்பழகனிடம் வழங்கினார்.

விழாக் குழு உறுப்பினர்களுக்கு அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் பொன்னாடை போர்த்தி பாராட்டுரை வழங்கினார்.

அதிக அளவு நிதி திரட்டித்தந்த என். ஆர். இராமசாமிக்கு, ஒரு பவுன் தங்கமோதிரத்தை, அமைச்சர் கருணாநிதி அவர்கள் பரிசாக வழங்கினார்.

நன்றி தெரிவித்து திரு. க. அன்பழகன் அவர்கள் பேசினார்.

தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ, சி. வே. வேலப்பன் எம். எல். ஏ, ப. தா. முத்து எம்.எல்.சி., என். ஏ. நடேசன், தியாகராசன், அருணகிரி ஆகியோரும் மற்றும் பலரும் பாராட்டுரை வழங்கினர்.

பம்பாயில் மற்றொரு 'சேனை'

கறுப்புப் பணத்துக்கு எதிராக நடவடிக்கையாம்

பம்பாய், மே 8—

பம்பாயில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் 200 பேர் சேர்ந்து கொண்டு 'பிலிம்சேனை' என்பதன் பெயரால் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

'கறுப்புப் பணம்' வாங்கும் திரைப்பட நடிகர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இந்த 'சேனை' கிளர்ச்சி செய்யுமாம்.

கணக்குக் காட்டாமல் கறுப்புப் பணம் வாங்கும் நடிகர்களின் பெயர்கள்—யாரிடமிருந்து எந்தப் படத்தில் நடிப்பதற்காக—எந்தத் தேதியில் அவர்கள் இந்தப் பணம் வாங்கினார்கள் என்பது போன்ற ஆதாரங்களை இந்த நிறுவனம் திரட்டுமாம்!

பிறகு ஆங்காங்கு கூட்டங்கள் நடத்தி வருமான வரி அலுவலகத்துக்கு ஊர்வலம் சென்று இத் தீமையை அம்பலப்படுத்துமாம்!

திரைப்பட நடிகர்களுக்குக் கோடிக் கணக்கில் 'கறுப்புப் பணம்' தரப்படுவதாக இவர்கள் மதிப்பிடுகிறார்கள்!

பொருளாதாரத்தில் மொரார்ஜி காணும் புதிய தத்துவம்!

பதவிக்காக ஒத்து ஊதும் பொருளாதார மேதையின் 'சந்தர்ப்ப வாதம்'

நாற்பது நாட்களுக்குள் நாட்டினுடைய நிலையே மாறிவிட்டதா?

பற்றுக்குறைத் திட்டத்தால் ஏற்படவிருக்கும் விளைவுகள் --- இரா. செழியன் எச்சரிக்கை

நாடாளுமன்ற மக்களவையில், கழக உறுப்பினர் திரு. இரா. செழியன், நிதி மசோதாமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயின் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டத்தாலும், நோட்டடிப்பாலும் நாட்டில் எத்தகைய பொருளாதாரச் சீர்கேடுக்ள் விளையும் என்பதைச் சுட்டிக்காட்டிக் கண்டித்தார்.

நிதியமைச்சரின் செயலுக்கு ஒத்து ஊதும் முறையில், பொருளாதாரப் பேராசிரியரான போக்குவரத்து அமைச்சர் திரு. வி.கே.ஆர்.வி. ராவ் நடந்துகொள்வதையும் கண்டித்தார்; அவருடைய முன்னுக்குப் பின் முரணான வாதங்களையும் அம்பலப்படுத்தினார்; திரு. செழியனின் உரை வருமாறு :—

"வரவு-செலவுத் திட்டத்தை அடிப்படையாக வைத்து, அதிலுள்ள வரி மாற்றங்களுக்குச் சட்டபூர்வமான உருவம் கொடுக்க இந்த நிதி மசோதா கொண்டுவரப் பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டம் விவாதிக்கப்பட்ட நேரத்தில நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களும், அவருக்குப் பக்கபலமாக டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்களும் வாதாடினார்கள்; அவர்கள் சில அடிப்படை பிரச்சினைகளைக் கிளப்பியுள்ளனர்.

டாக்டர் ராவ் பேசும்பொழுது கூறினர் :—

"நாட்டுப் பொருளாதாரத்தின் எதிர்காலத்தையும், வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையாக உள்ள குறிக்கோள்களையும் பற்றி நாம் நன்கு உணரவேண்டும் என்று நினைத்து நான் இந்த விவாதத்தில் கலந்துகொள்ள முன்வந்தேன்."

டாக்டர் ராவ் கூறியது போலவே, இந்த வரவு-செலவுத் திட்டத்தால் பொருளாதாரம் எந்த அளவு பாதிக்கப்படப் போகிறது என்றும், குறிக்கோள்கள் எந்த அளவு நிறைவேற்றப்படும் என்றும் நாம் பார்க்கவேண்டும்.

மக்களின் சதையைப் பிய்த்துள்ளார் மொரார்ஜி

சென்ற ஆண்டு (1967—68) ரூ. 300 கோடி பற்றுக்குறையாகவும், வரும் ஆண்டு (1968—69) ரூ. 290 கோடி பற்றுக்குறையாகவும் வரவு-செலவுத் திட்டம் போடப்பட்டுள்ளது.

வரவுக்குமேல் செலவு காட்டும் இந்த வரவு-செலவுத் திட்டமுறையைப்பற்றி நிதியமைச்சர் பேசியுள்ளார்; பற்றுக்குறையை மிகவும் ஆதரித்து டாக்டர் ராவ் அவர்களும் பேசினர்.

சதையை இங்கிருந்து பிய்த்து மற்றொரு இடத்தில் ஒட்டவைக்கும் 'பிளாஸ்டிக்' அறுவைச் சிகிச்சை தந்ததாக மொரார்ஜி தேசாய் கூறினர்.

இந்திய மக்களின் சதையைப் பிய்த்துள்ளார்; ஆறாத இரணம் இருக்கிறது; ஆனால் மொரார்ஜி செய்த இந்த வேதனைமிக்க 'பிளாஸ்டிக்' அறுவை முறையால், இந்தியப் பொருளாதாரத்துக்கு என்ன அழகு கிடைத்ததோ தெரியவில்லை!

சிதைந்த உறுப்புகளைச் செம்மைப்படுத்தி அழகுதர 'பிளாஸ்டிக்' அறுவை முறை நடைபெறும்; இவர் முறையில், வேதனைதான் தரப்பட்டது. ஆனால், அழகு வந்ததாகத் தெரியவில்லை!

போற்றிப் புகழ்ந்து பேசுவதால் பலன் என்ன உண்டு?

பற்றுக்குறைத் திட்டத்தைப் பற்றி நிதியமைச்சரும் போக்குவரத்து அமைச்சரும் பேசியதைப் பார்த்தால், பற்றுக்குறை என்பது நாட்டுக்குக் கிடைத்த நல்ல பலன்—நன்மைபோலத் தோன்றுகிறது.

எல்லாவற்றையும் தீர்க்கும் 'சர்வ ரோக நிவாரணி' போலப் பற்றுக்குறை ஆகிவிட்டது! வரவுக்கு மேல் செலவு செய்து பற்றுக்குறை போடுவதைப் பொருளாதாரத்தில் சீர்கேடாக நினைக்காமல், 'பற்றுக்குறை, ஒரு நல்ல பொருளாதாரத்தின் அறிகுறி' என்ற போக்கில் அவர்கள் அதைப் போற்றிப் புகழ்ந்து பேசினர்கள்.

'ஆபத்தானது' என்பதை ஏனே உணரவில்லை!

காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா மார்ச் 9-ம் நாள் பெங்களூரில் பேசியிருக்கிறார். மார்ச் 10-ம் நாள் 'ஸ்டேட்ஸ்மன்' நாளிதழில் வந்திருப்பதாவது :—

"சிறிய—நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற, பற்றுக்குறை நிதித் திட்டத்தில் ஈடுபடவேண்டும்.

"நாட்டிலுள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி தர மத்திய அரசாங்கம் பற்றுக்குறை திட்டத்தைப் போட வேண்டுமென்று நான் கேட்டுள்ளேன்.

"ஒரு ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி தர, சராசரியாக ரூ. 1000-த்திலிருந்து ரூ. 1,500 வரை ஆகலாம்.

"நீர்ப்பாசன வசதிகளைத் தர, சில ஆண்டுகளுக்குப் பற்றுக்குறை பட்ஜெட்டுகளைப் போடுவது நல்லது என்று மைசூர் மாநில விவசாயிகள் மாநாட்டில் திரு. நிஜலிங்கப்பா கூறினர்."

'நீர்ப்பாசனத் திட்டங்களை மட்டுமல்ல—வேறு எந்தத் திட்டமானலும், பற்றுக்குறை நிதித் திட்டத்தால் நிறைவேற்றி விடலாம்' என்ற நம்பிக்கை வளர ஆரம்பித்துள்ளது.

நிறைவேற்றுகின்ற திட்டம் நல்லதாக இருக்கலாம்— நாட்டு மக்களுக்குத் தேவையானதாக இருக்கலாம்; ஆனல் அதை நிறைவேற்றக் கையாளப்படும் பற்றுக்குறை முறை எவ்வளவு ஆபத்தானது என்பதை அவர்கள் உணரவில்லை!

'இந்தியாவிலுள்ள நிலங்களுக்கெல்லாம் நீர்ப்பாசன வசதி' என்று கூறிவிடுவது சுலபம். ஆனல் அது எவ்வளவு பெரியது என்பதை உணரவில்லை!

நாட்டுப் பொருளாதாரம் எந்த அளவுக்குத் தாங்கும்?

இப்பொழுதுள்ள நிலைமையில், மொத்தம் விளைச்சலுள்ள நிலங்கள் 33 கோடி ஏக்கர் பரப்புள்ளன; இதில் நீர்ப்பாசன வசதியுடையது 6 கோடி ஏக்கர்கள்; பாக்கியிருக்கும் 27 கோடி ஏக்கர்களுக்கு—திரு நிஜலிங்கப்பா கூறுகிற கணக்குப்படி—குறைந்த அளவில் பார்த்தாலும், ஏக்கருக்கு ரூ. 1,000 என்ருல், மொத்தம் ரூ 27,000 கோடி தேவைப்படும். இதைப் பற்றுக்குறையாகப் போட்டாலும், 20 ஆண்டுகள் செய்தாலும், ஆண்டுக்கு ரூ. 1,400 கோடி பற்றுக்குறை—நோட்டு அடிக்கும் முறை—கையாளப்பட வேண்டும். நாட்டுப் பொருளாதாரம் இந்த அளவு பற்றுக்குறையைத் தாங்குமா என்று கவனிக்க வேண்டும்.

'பற்றுக்குறை' என்பது, 'பொருளாதாரச் சீர்கேடு' என்ற எண்ணம்போய், 'ஆகா; எவ்வளவு நல்ல திட்டம்; காமதேனு — கற்பகத் தரு' என்று புகழ ஆரம்பித்துவிட்டார்கள்!

சமாளிக்கக்கூடிய அளவில்கூட அல்ல—ரூ 300-கோடி அளவில் ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து போடுவது சரியா என்று யோசிக்கவேண்டும்.

நிதானம் தவறிய மனதினரா மொரார்ஜி?

சென்ற ஆண்டு நிதித் திட்டத்தில் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களே வலியுறுத்தினர் :—

"பண வீக்கத்தை—அந்த மனோபாவத்தைத் தடுத்து நிறுத்துவது நமது முதற் கடமையாகும். தொடர்ந்து, பெரிய அளவில் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டத்தைப் போடுவது சரியல்ல. இந்த ஆண்டு வரவுக்கும்-செலவுக்கும் சரிக்கட்டி, நிதித் திட்டத்தை நான் அமைத்துள்ளேன்."

வரவு செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளிக்கையில், 14-4-67-ல் நிதியமைச்சர் கூறியதாவது :—

"நான் முதலில் கூறியது போல், சரிக்கட்டிய நிதித் திட்டம்தான் நல்லது. சரிக்கட்டாமல், வரவுக்குமேல் செலவு சென்று துண்டு விழுந்தால், அதனுல் எல்லோருக்கும் கெடுதல் உண்டாகும். நிதானமான மனதுடையவர்கள், வரவுக்கும்-செலவுக்கு சரிசெய்யும் நிதானமான திட்டத்தைப் போடுவார்கள்."

சென்ற ஆண்டு இவ்வாறு கூறிய நிதியமைச்சர் இந்த ஆண்டில் பற்றுக்குறைத் திட்டத்தை—'நிதானம் தவறிய பட்ஜெட்டை'ப் போட்டுள்ளார்.

அவருடைய சித்தாந்தப்படியே, அவருடைய மனம் நிதானம் தவறிவிட்டதோ என்னவோ—நமக்குத் தெரியாது; அதை அவர்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

அறிவுத் துறையை விட்டுச் சென்றதால் இந்த நிலையா?

மற்றவர்களைவிட, இந்தப் பற்றுக்குறைத் திட்டத்தை டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் போற்றிப் புகழ்ந்ததுதான் நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அவர் ஒரு பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றி இருக்கிறார்; பிறகு, திட்டக் குழுவில் உறுப்பினராக இருந்தார்; இப்போது போக்குவரத்து அமைச்சராக இருக்கிறார்!

பற்றுக்குறை நிதித் திட்டம் பற்றி ஒவ்வொரு கட்டத்திலும்—இது வரையில்—அவருக்கு என்ன கருத்து இருந்தது என்று கவனிக்கலாம்.

டாக்டர் ராவ் அவர்கள் பொருளாதாரப் பேராசிரியராக இருந்த பொழுது, அவருடைய மாணவனாக இருக்கும் பேறு எனக்குக் கிடைத்ததில்லை. அவருடைய மாணவராகப் பலர் இருந்திருக்கின்றனர்.

பற்றுக்குறை பட்ஜெட் பற்றி பேராசிரியர் ராவ் என்னென்ன சொல்லிக்கொடுத்தார் என்று அவருடைய பழைய மாணவர் கூறுவதை இங்கு எடுத்துவைக்க விரும்புகிறேன்.

'எக்னமிக் டைம்ஸ்' என்ற பத்திரிகையில், பேராசிரியர் ராவ் அவர்களின் பழைய மாணவர் ஒருவர் எழுதுகிறர் :—

"பற்றுக்குறை பட்ஜெட்டைப் பற்றி டாக்டர் ராவ் இப்போது பேசியது, முன்பு அவர் பேராசிரியராக இருந்தபொழுது கொண்டிருந்த கருத்துக்கு மாறுபட்டிருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

"பொருளாதாரப் பேராசிரியராகப் பல்கலைக் கழகத்தில் அவர் வகுப்பறையில் சொல்லிக்கொடுத்தது எனக்கு நன்ருக நினைவிருக்கிறது; 'பற்றுக்குறை பட்ஜெட்டால், உற்பத்தியோ உண்மையான வருமானமோ உயராது; பணவீக்கமும் போலி வருமானமும், விலைவாசி உயர்வும்தான் அதிகரிக்கும்' என்று அவர் விளக்கியிருக்கிறர்.

"பின்தங்கிய நாடுகளில், பற்றுக்குறை பட்ஜெட்டால் பொருளாதார முன்னேற்றத்தை உண்டாக்கிவிட முடியாது என்று பல தடவை அவர் எங்களுக்குச் சொல்லியிருக்கிறர்.

"இப்பொழுது அவர்—அமைச்சரவையில் இருக்கிற காரணத்தால் — பற்றுக்குறை பட்ஜெட்டுக்கு ஆதரவாகப் பேசுகிறர் போலும்!

"அறிவுத்துறையை விட்டு அரசியல் துறைக்கு வந்துவிட்டதால், டாக்டர் ராவ் இப்படி மாறுபட்டுப் பேசுகிறர் என்று அவருடைய பழைய மாணவர்களாகிய நாங்கள் எங்களைச் சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது"

அன்று அப்படிக் கூறினர்--- இன்று இப்படிச் சொல்லுகிறர்;

பேராசிரியர் ராவ் என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்பதற்கு அவருடைய பழைய மாணவர் தரும் சாட்சியம் இது!

அடுத்தபடியாக, திட்டக் குழு உறுப்பினராக இருந்த டாக்டர் ராவ் என்ன கருதினர் என்று கவனிக்கலாம்.

அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியால் வெளியிடப்படும் 'எக்னமிக் ரிவியு' என்ற பத்திரிகையின் 1966 பிப்ரவரி 10-ந் தேதியிட்ட இதழில், டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் ஒரு கட்டுரை எழுதினர்; அப்பொழுது அவர் திட்டக் குழு உறுப்பினர்; அவர் எழுதிய கட்டுரைக்குத் தரப்பட்ட தலைப்பு, 'சமதர்ம சமுதாயம் நோக்கி எந்த அளவு நமது திட்டம் முன்னேறியுள்ளது?' என்பதுதான்.

காங்கிரசின் குறிக்கோள், 'சமதர்மத் திட்டம்' என்று கூறப்படுகிறது.

காங்கிரசு அரசாங்கம் போடுகிற திட்டங்களாலும் பொருளாதார முறைகளாலும் அந்தக் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டுள்ளதா இல்லையா என்பதை டாக்டர் ராவ் ஆராய்கிறர் :—

"புள்ளிவிவரங்களை வைத்து மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், முன்னேற்றம் கிடைத்துள்ளதைப்போலத் தோன்றும். ஆனுல் நடைமுறையில் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கவில்லை.

"முன்னேற்றத்துக்கு உற்சாகம் தரவேண்டுமென்று அரசாங்கம் பல துறைகளைக் கையாளுகிறது. அந்த உற்சாக முறைகளெல்லாம் வரி ஏய்ப்பவர்களுக்கும், சட்டத்தை மீறுபவர்களுக்கும்தான் பயன்படுகின்றன.

"சமதர்ம மனப்பான்மை என்பது, எள்ளளவும் எந்த இடத்திலும் காணப்படவில்லை; சமதர்ம மனப்பாங்கை வளர்க்க அரசாங்கம் சிறிதுகூட முயற்சி எடுக்கவில்லை! மாருக, முதலாளித்துவ மனப்போக்கு வளர, அரசாங்கத்தின் கொள்கையும் திட்டங்களும் பயன்பட்டிருக்கின்றன."

1966-ல் டாக்டர் ராவ் இவ்வாறு எழுதினர். 'சமதர்ம நோக்கம், அரசாங்கத் திட்டங்களால் நிறைவேறவில்லை' என்று அப்பொழுது கூறினர்.

இப்பொழுது — மொரார்ஜியின் பற்றுக்குறைத் திட்டத்தை ஆதரிக்கிறபொழுதுகூட—'நான் வாழ் நாள் முழுவதும் ஒரு சனநாயக சமதர்மவாதி; மாறுதலில்லாமல் தொடர்ந்து இருப்பவன்' என்று கூறியுள்ளார்.

இந்த அரசாங்கத்துக் கொள்கைகளால் சமதர்மத் திட்டம் நிறைவேறவில்லை என்று 1966-ல் அவர் கூறினர்; இரண்டு ஆண்டுக் காலத்தில், நிலைமையில் மாறுதல் நேரிட்டிருக்கலாம்—அவரைப் பொறுத்தவரை!

நிலைமை மாறிவிட்டதாம்; எனவே இந்த நிலையாம்!

பேராசிரியராக இருந்த டாக்டர் ராவின் கருத்தைக் கூறினேன்; திட்டக் குழு உறுப்பினராக இருந்த டாக்டர் எழுதியதை எடுத்துக் காட்டினேன்; போக்குவரத்து அமைச்சரானபின்னர்கூட, பற்றுக்குறைப் பொருளாதாரம் பற்றி என்ன கருதினர் என்று கவனிக்கலாம்.

1968 பிப்ரவரி 1-ந் தேதிய அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியின், 'எக்னமிக் ரிவியு' பத்திரிகையில், 'சோதனைக் கட்டத்தில் இந்தியப் பொருளாதாரம்' என்ற கட்டுரையில் போக்குவரத்து அமைச்சர் டாக்டர் ராவ் எழுதியிருப்பதாவது :—

"வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி மட்டுமல்ல; உள்நாட்டில்கூட நிதி வசதி குறைந்து, முதல் போடும் சக்தி பலவீனமடைந்துவிட்டது; இதனுல் பொது—தனித் துறைகளில் தொழில் வளர்ச்சி குன்றிவிட்டது.

"இந்த ஆண்டு உணவு உற்பத்தி அமோகம் என்றபோதிலும்—அதனுல் ரூ. 15,000 கோடி நாட்டு வருமானம் கூடுதலாகும் என்ருலும்—சென்ற ஆண்டைவிட இது, 12 சதவீதம் வளர்ச்சி என்ருலும்—தொழில் வளர்ச்சிகளில் போடக்கூடிய அளவு மூலதனத்தை நம்மால் திரட்ட முடியவில்லை. மூலதனத்தைத் திரட்ட முடியாதது தான், நமது பெரிய தலைவலி!

"வெளிநாட்டு உதவியைத் தேடுவதாலோ, பற்றுக்குறை பட்ஜெட் போடுவதாலோ இந்தக் குறையைப் போக்க முடியாது."

இந்த ஆண்டு பட்ஜெட், பிப்ரவரி 29-ந் தேதி தரப்பட்டது; டாக்டர் ராவ் எழுதிய கட்டுரை பிப்ரவரி 1-ந் தேதி வெளிவந்தது!

பிப்ரவரி 1 ந் தேதி, 'பற்றுக்குறை பட்ஜெட் போடுவதால் பயனில்லை' என்று எழுதிய டாக்டர் ராவ், மார்ச் 13-ந் தேதி அதனை ஆதரித்து இங்கு பேசுகிறர்.

'நிலைமை மாறிவிட்டது; அதனுல் பற்றுக்குறைத் தத்துவத்தை ஏற்றுக்கொள்ளலாம்' என்று கூறுகிறர்கள்......

நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் :— "பற்றுக்குறைத் தத்துவத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கனம் உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்."

இரா. செழியன் :— "ஆக, நிதியமைச்சர் அவர்கள் பற்றுக்குறைத் தத்துவத்தை ஒப்புக் கொள்ளவில்லை; ஆனுல் பற்றுக்குறைத் திட்டத்தைப்

(3-ம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றத்தில் இரா. செழியன் எச்சரிக்கை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டுள்ளனர்! அப்படித் தானே!

அவ்வளவு சுலபமாக மாறிவிடக் கூடாது!

'நிலைமை மாறினால், முறைகளை யும் மாற்றிக்கொள்ள வேண் டும்' என்று சிலர் வாதிடு கிறார்கள்.

நிலைமைகள் மாறுவதால்தான், தத்துவம் என்ற அடிப்படை உண்டாகிறது!

நிலைமைகள் மாறலாம்; ஆனால், தர்க்க முறையும் அத்துடன் மாறக்கூடாது!

பிப்ரவரி 1-ம் நாள் கூறிய வாதம் மார்ச் 13-ம் நாள்—ஒரு 40 நாட்களுக்குள் அவ்வளவு சுலபமாக மாறிவிடக்கூடாது!

'40 நாட்களுச்குள் நிலைமை மாறிவிட்டது' என்று யாரும் கூறிட முடியாது!

உயர்ந்திருந்தபோதும் சரிந்திருந்தபோதும்!

பற்றுக்குறை நிதித்திட்டத்துக்கு ஒரு காரணம் காட்டப்படு கிறது; '1967–68-ல் உணவு உற்பத்தி நன்றாக இருந்தது; 1968–69-லும் நல்ல விளைச் சல் இருக்கப்போகிறது; எனவே, ரூ. 590 கோடிக்கு புது நோட்டுகள் அடித்தால், அது உற்பத்தி உயர்வாக ஏற்றுக்கொள்ளப்படும்' என்று வாதிடுகிறார்கள்.

'நல்ல விளைச்சல்; அதனால், பற்றுச்குறை வரவு–செலவுத் திட் டம் போடலாம் என்று கூறப்பட் டால், இவர்கள் பற்றுக்குறை பட்ஜெட் போட்டபொழுதெல்லாம் நல்ல விளைச்சல் இருப்பதைப் பார்த்துக்கொண்டு போட்டார் களா என்று கேட்க விரும்பு கிறேன்.

உற்பத்தி உயர்ந்தபொழுதும் பற்றுக்குறைத் திட்டம் போட்டார்கள்! உற்பத்தி சரிந்தபொழுதும் பற்றுக் குறைத திட்டத்தைப் போட் டார்கள்!

1961—லிருந்து 1968-வரை உற் பத்தியின் அளவும், பற்றுக்குறை யின் அளவும், விலைவாசிகள் ஏறிய வேகமும் புள்ளி விவரங் களைப் பார்த்தால் தெரியும்.

1961—62-ல் உணவு உற்பத்தி 82 மிலியன் டன் (அதாவது 8 கோடி 20 இலட்சம் டன்) ஆக இருந்தது. அந்த ஆண் டில், ரூ. 114 கோடிக்குப் பற் றுக்குறை போட்டார்கள்!

1962—63-ல் உணவு உற்பத்தி 8 கோடி டன்னாகக் குறைந் தது; இருந்தபோதிலும், பற் றுக்குறை ரூ. 156 கோடியாக உயர்ந்துவிட்டது!

அட்டவணை

ஆண்டு	உணவு உற்பத்தி மில்லியன் டன்	பற்றுக்குறை நிதித்திட்டம்	விலை உயர்வு (1950—100)
	டன்		
1961-62	82	ரூ.114கோடி	124
1962-63	80	156 ,,	127
1963-64	81	167 ,,	139
1964-65	89	172 ,,	151
1965-66	72	173 ,,	172
1966-67	75	295 ,,	204
1967-68	95	300 ,,	212

1963–64-ல், 8 கோடி 10 இலட் சம் டன் உற்பத்தி; பற்றுக்குறை 167 கோடி ரூபாய்; விலைவாசி 139 புள்ளிக்கு உயர்ந்தது!

1964–65-ல் 8 கோடி 90 இலட் சம் டன் உற்பத்தி; 1965–66-ல் 7 கோடி 20 இலட்சமாக அது சரிந்தது!

உற்பத்தி குறைந்தால்கூட பற் றுக்குறை பட்ஜெட் ரூ. 173 கோடிககுப் போடப்பட்டது. விலை வாசி புள்ளி 173-க்கு உயர்ந்தது!

உற்பத்தி குறைந்த போதும் பற்றுக்குறை நிதித் திட்டம் போட் டிருக்கிறார்கள்! உற்பத்தி அதிக மானபோதும் பற்றுச்குறை நிதித் திட்டம் போட்டிருக்கிறார்கள்!

இரண்டு சமயத்திலும் விலைவாசி ஏறியபடி இருக்கிறது!

1968-69-ல் தொழில் உற்பத்தி 5 அல்லது 6 சதவீதம் உயரும் என்று நிதியமைச்சர் எதிர்பார்க் கிறார்.

1963 64-ல் இதேவித உயர்வு இருந்தது; ஆனால், இதைவிடக் குறைந்த அளவு பற்றுக்குறைகூட அப்பொழுது பொருளாதாரம் ஏற் றுக்கொள்ளவில்லை—விலைவாசி உயர்ந்தது!

பொருளாதாரம் முன்னேற வழி என்ன உண்டு?

'பற்றுச்குறை நிதித் திட்டத் தினால் உற்பத்தி உயர்ந்தது என்றால் நல்லது; ஆனால் பற்றுக்குறை பட்ஜெட்டைப் போட்டு — நோட்டுகளை அடித்து—பணப் புழக்கத்தை மட்டும் ஒரு சிலரிடம் அதிகப் படுத்துவதால், விலைவாசிகள் உயருமே தவிர, பொருளா தாரம் முன்னேற வழியில்லை!

வேடிக்கையாக இருக்கிறதே!

இப்பொழுதுள்ள மந்த நிலை யைப் போக்க, டாக்டர் ராவ் கூறி யுள்ள முறைகள் விசித்திர மானவை; மார்ச் 13-ல் அவர் பேசும்பொழுது குறிப்பிடுகிறார் :—

"அரசாங்கச் செலவு உயர்வ தால்—பொதுத் துறையில் முத லீடு செய்வதால்—பொதுத் துறை உற்பத்தி அதிகரிப்ப தால்—தனியார் துறை உற் பத்தி உயருவதால், மந்தநிலையி லிருந்து வெளியேறலாம்."

பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் உற்பத்தி அதிகப்படு வது நல்லது. ஆனால், 'அரசாங்கச் செலவு உயருவதுகூட நல்லது தான்' என்று டாக்டர் ராவ் கூறு வது வேடிக்கையாக இருக்கிறது.

நிர்வாகச் செலவுகள் ஆக்கபூர்வமானதுதானா?

ஆக்கபூர்வமான செலவுகள்—ஆக்கபூர்வமல்லாத செலவுகள் என்று பார்க்கும்பொழுது, அர சாங்க நிர்வாகச் செலவுகள் ஆக்க பூர்வமல்லாத செலவுகளாகும்.

அரசாங்கச் செலவுகளில் ஆக்க பூர்வமான — அதாவது வளர்ச்சி தரும் திட்டச் செலவுகள் அதிகம் இருந்தால்தான் நாட்டுக்கு நல்லது.

இந்த வகையில் பார்த்தால், மத் திய அரசாங்கத்தைவிட மாநில அரசுகள் செம்மையாகவும் சீராக வும் செலவு செய்துவருகின்றன.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங் களிலும் ஆன வளர்ச்சிக்கான முதலீடு—வளர்ச்சியற்ற செலவு—என்று பிரித்துப் பார்த்தால், இந்த உண்மை விளங்கும்.

ஐந்தாண்டுத் திட்டம்	மத்திய அரசு		மாநில அரசுகள்	
	வளர்ச்சித் திட் டம் -- சதவீதம்	வளர்ச்சியற்றத் திட்டம்-சதவீதம்	வளர்ச்சித் திட் டம் -- சதவீதம்	வளர்ச்சியற்றத் திட்டம்-சதவீதம்
முதல் திட்டம்	23	77	54	46
இரண்டாம் திட்டம்	31	69	57	43
மூன்றும் திட்டம்	19	81	58	42

வளர்ச்சித் திட்டங்களைவிட வளர்ச்சியற்ற செலவுகள்!

மத்திய அரசாங்கத்தில், வளர்ச் சித் திட்டங்களைவிட வளர்ச்சி யற்ற வெறும் செலவுகள் அதிகமாக உள்ளன.

கடைசியாக 100-க்கு 19 பங்கு தான் வளர்ச்சித் திட்டங் களுக்குத் தரப்படுகிறது; பாக்கி 81 பங்கு நிர்வாகம் போன்ற வளர்ச்சி தராத திட் டங்களில் செலவாகிறது!

மாறாக மாநிலங்களை பார்த்தால், 100-க்கு 57 பங்கு வளர்ச்சிக் காகவும், பாக்கி 43 பங்கு மற்ற செலவுகளிலும் செல விடப்படுகிறது!

வளர்ச்சித் திட்டங்களை மத்திய அரசாங்கம்தான் அதிகம் போடமுடியும்; அதற்குத் தான் சக்தி இருக்கிறது. இருப்பினும், மற்ற செலவு கள் அதற்கு வளர்ந்துவிட் டன!

பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. மசானி அறி வித்தபடி, 1967—68-ல் கவ னிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குகளில், மொத்தம் ரூ. 77-கோடி செலவுகளை அர சாங்கம் தவிர்த்திருக்கலாம்! மிச்சப்படுத்தியிருக்கலாம்! செம்மையாக இல்லாத கார ணத்தால், ரூ. 77-கோடி வீணாக்கப்பட்டிருக்கிறது!

வளர்ச்சிக்கு உதவாத வீண் செலவுகளைத் தவிர்ப்பதால், பற்றுச்குறையை நீக்கலாம் -- குறைக்கலாம்!

கூடுதலாக வரிகள் கிடைக்காததேன்?

பற்றுக்குறை நிதித் திட்டத் தைப் போடும்பொழுது, தொழில் உற்பத்தி 5 அல்லது 6 சதவீதம் உயரப்போகிறது!

'உணவு உற்பத்தி 10 சதவீதம் உயரும்' என்று கணக்குப் போட்டு, 'ரூ. 600-கோடி நோட்டு அடிப்பதைத் தாங்கும்' என்று கூறுகிறார்கள்.

மந்த நிலைமை போய் தொழில் உற்பத்தி அதிகரிப்பது உண்மை யென்றால்—உணவு உற்பத்தி பெருகி வாங்கும் சக்தி அதிக மாகும் என்றால், அது, தொழில்—வியாபாரம்—வருவாய்த் துறை களில் பிரதிபலித்து, அரசாங்கத் துச்குக் கிடைக்கும் வரிகள் கூடுத லாக இருக்கவேண்டும்.

தற்பொழுதுள்ள வரி விகிதங் களை வைத்துப் பார்த்தால், ஏற்று மதி—இறக்குமதி வரி 1967—68-ல் ரூ. 523-கோடி; 1968—69-ல் ரூ 520-கோடி; ரூ. 3-கோடியைக் குறைவாக எதிர்பார்க்கிறார்கள்!

கம்பெனிகள் வரி 1967—68-ல் ரூ. 320-கோடி; 1968—69-ல் ரூ 325-கோடி; ரூ. 5-கோடிதான், கூடுதலாக எதிர்பார்க்கப்படு கிறது!

உண்மையை மறைக்கிறது நிதித் திட்டம்!

திட்டங்களை அடிப்படையாக வைத்துப் பார்த்தாலும், 1967—68-ல் ரூ. 1,859 கோடி திட்டங் களுக்கு ஒதுக்கப்பட்டது! 1968—69-ல் ரூ 1,809 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது! ரூ. 50 கோடி குறைக்கப்பட்டுவிட்டது!

நாட்டு நிலைமை சீரடைந்து—தொழில் வளர்ச்சி ஏற்பட்டு—உற்பத்தி பெருகி—நாட் டுக்கு உண்மையான வருமா னம் அதிகமாகும் என்றால், அரசாங்கத்தின் வரி வருமா னமும் அவற்றையொட்டி உயரவேண்டும்.

அரசாங்கம், 'அதிக வரி வரு மானத்தை எதிர்பார்க்க வில்லை' என்கிறது; என்ன பொருள் இதற்கு?

ஒன்று—பொருளாதாரம் வள ரும் என்பதில் இவர்களுக்கே நம்பிக்கை இல்லை; அல்லது வரி வசூலில் எதிர்பார்ப்பதை விட வேண்டுமென்றே இவர் கள் குறைத்துக் காட்டுகிறார் கள்!

எதுவாக இருந்தாலும், நிதித் திட்டம் உண்மையை மறைக் கிறது!

புதிய காரணத்தைக் கண்டுபிடித்தார் மொரார்ஜி

புதிய வரி விதிப்பில், தபால் கட்டணங்களை உயர்த்தியது எல் லோருடைய கண்டனத்தையும் ஈர்த்திருக்கிறது!

பொதுமக்கள்மீது இன்னும் அதிகப் பளுவை ஏற்றுகிற இந்த முறைக்கு எதிர்ப்பு வந்தபொழுது, மொரார்ஜி தேசாய் ஒரு புதிய காரணத்தைக் கண்டுபிடித்துள் துள்ளார்; '100-க்கு 75 பங்கு மக்கள் கல்வியறிவு இல்லாதவர் கள்; எனவே கார்டு விலை உயரு வது அவர்களைப் பாதிக்காது' என்று அவர் கூறுகிறார்.

'100-க்கு 75 பேர் கல்வியறிவில் லாதவர்கள்; அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது' என்ற காரணத்தை வைத்து, எல்லாக் கல்லூரிகளையும் மூடிவிடலாம்; எல்லாப் பத் திரிகைகளையும் நிறுத்திவிட லாம்; இவற்றால் 100-க்கு 75 பங்கு மக்களுக்குப் பாத கம் ஏற்படாது!

துணைத் தலைமையமைச்சருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள் கிறேன்—எழுதப் படிக்கத் தெரி யாதவர்கள்கூட அஞ்சல் அட் டைகளைப் பயன்படுத்துகிறார்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களி டம் தந்து கார்டு எழுதச் சொல்வ தும், வந்த கடிதத்தைப் படிக்கச் சொல்வதும் சிற்றூர்களில் நடை பெறும் அன்றாட நிகழ்ச்சிகளா கும்.

வரி விதிப்பு வலைக்குள்!

'வருமான வரி வரம்பை ரூ. 5,000-லிருந்து ரூ. 7,500-க்கு உயர்த்தவேண்டும்' என்ற கோரிக் கையை நிதியமைச்சர் மீண்டும் கவனிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

வரிவிதிப்பு வலைச்குள் அதிக மான மக்களை அகப்படச் செய்வ தால் மட்டும் அதிக வரி வந்து விடும் என்ற நம்பிக்கையில் நிதி அமைச்சர் அதிகப் பிடிவாதம் காட்டுகிறார்.

வருமான வரி வரம்பை உயர்த்து வது பற்றி திரு. பூதலிங்கம் தந்த அறிக்கையில் கூறியதை அவை யின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன் :—

"அதிகமானவர்களை மேலும் மேலும் வரி விதிப்புக்கு ஆளாக் குவது, புள்ளி விவரத்துக்குப் பெரிதாகப்படலாம். ஆனால் நடைமுறையில், அரசாங்க வரி இலாகாவின் வேலையும் திறமை யும் அதிகம் பாதிக்கப்படுகிறது.

"அதிகமான பேர்களை வரு மான வரி விதிப்பில் கொண்டு வருவதால், நாட்டு வளர்ச்சியில்—அரசாங்கப் பொருளாதாரத் தில் அதிகமான பேர்களுக்கு, பங்கு தருகிறோம் என்று சிலர் நினைக்கிறார்கள்.

"மறைமுக வரி அதிகமாகி வரும் நேரத்தில், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எல்லோரும் வரி விதிப்புக்கு ஆளாகிறார்கள்.

"வருமான வரி ஒனறுதான் அதற்கு வழி என்று நினைக்க வேண்டாம். 'வருமான வரி வரம்பை உயர்த்துவதால், மற்ற உயர்ந்த வரி விகிதங்களைக் கவ னிப்பதிலும், வசூலிப்பதிலும் அதிகக் கவனம் செலுத்தலாம்' என்று சில வருமான வரி அதி காரிகள் கருதுகின்றனர்.

"இதன்படி, ரூ. 100 கோடி அதிக வருமான வரி வசூலாவ துடன், தேங்கிக் கிடக்கும் பழைய வரி பாக்கியில் உடனடி யாக ரூ. 200 கோடியாவது வசூலிக்கலாம் என்று கணக்கிட் டுள்ளனர்......

"வருமான வரி வரம்பை ரூ. 7,500-க்கு உயர்த்துவதால், 1963—64 கணக்குப்படி அர சாங்கம் இழக்கவிருக்கும் தொகை 5 கோடி 82 இலட்சம் ரூபாய்தான்."

திரு. பூதலிங்கம் அவர்கள் தந்த அறிக்கைப்படி பார்த்தாலும், வரு மான வரி வரம்பை ரூ. 7500–க்கு உயர்த்த நிதியமைச்சர் முன்வர வேண்டும்.

மக்களுக்குக் கிடைத்த நன்மைதான் என்ன?

நிதியமைச்சர் நிதித் திட்டத் தால், பொதுமக்களுக்கு எந்தவித நன்மையோ, அனுகூலமோ கிடைக்கவில்லை. இதை எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் கூறினால்,

(4-ம் பக்கம் பார்க்க)

பொருளாதாரம் யாருக்குப் புரியவில்லை?

சென்னை, மே 8—

"சனநாயக உணர்வு படைத்த அண்ணா அவர்கள், பக்தவத் சலத்திடமிருந்து அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது, அரசின் ஆண்டு வரு மானம் ரூ 190 கோடி; இப் போது ரூ. 248 கோடி!

"தாங்கக்கூடியவர்களுக்கு தாங்குகின்ற வகையில் வரி போட்டு—ஏழை, பாட்டாளி, உழவர் பெருங்குடி மக்களுக்கு எந்தவிதமான வரியும் போடா மலேயே தமிழகம் முழுவதிலும் உள்ள புஞ்சை நில வரியை ரத்து செய்து—ரூ. 74 இலட் சம் உபரி பட்ஜெட் காட்டினார் அண்ணா!

"ஆனால் மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில், புகை யிலை, தேயிலை, சாக்லெட் ஆகிய எல்லாப் பொருட்களுக் கும் ரூ. 65 கோடிக்கு வரி போட்டும், பல கோடி ரூபாய் துண்டு விழும் வரவு-செலவுத் திட்டத்தைத்தான் தயாரிக்க முடிந்தது!

"'பொருளாதாரம் புரியுமா அண்ணாவுக்கு' என்றவர்கள் ஏன் இதைப் பற்றிப் பேச வில்லை? துண்டுவிழும் ரூ. 290 கோடிக்கும் நோட்டடிக்கப் போவதாகத் தெரிவித்துள் ளார் மொரார்ஜி! இந்த இரண்டு வார காலத்தில், நூறு கோடி ரூபாய்க்கு நோட் டித்துவிட்டார்!

"நோட்டடிப்பதால் பணவீக்கம் ஏற்பட்டுப் பொருட்களின் விலை ஏறும்! அதனால், நடுத்தர மக்கள் துன்புறுவர்! பாட் டாளிகள் பஞ்சத்தில் விழுவார் கள்! கறுப்பு மார்க்கெட்டுக் காரனும், கொள்ளை இலாபக் காரனும்தான் வாழ்வான்!

"இதை எல்லாம் மொரார்ஜி யிடம் கூறினால், 'பண்டங் களின் விலைகள் குறைந்துள் ளன; ஆகவே, அதை உயர்த்த நான் இதைச் செய் கிறேன்' என்கிறார்!

"இந்த நிலையில், மாநில அரசு என்ன செய்யமுடியும்? விலை கள் உயர இப்படியெல்லாம் மத்திய அரசு காரணமாக இருக்கிறது!

"இப்படிப்பட்ட நிலையிலும், ஏழரைக் கோடி ரூபாய் நட் டத்தை ஏற்றுக்கொண்டும்—புஞ்சை நில வரியை ரத்துச் செய்ததால் ஒன்றே முக்கால் கோடி ரூபாயை இழந்தும்கூட கல்விக்குக் காங்கிரசார் செல விட்டதைவிடப் பல கோடி அதிகம் ஒதுக்கித் திட்டம் வகுத்துள்ளோம்!

"புதிதாகப் பதினொரு கல்லூரி களையும் அறுபது உயர்நிலைப் பள்ளிகளையும் சென்ற ஆண் டில் திறந்துள்ளோம்!

"'தொழில் வளரவில்லை; தொழிலை ஏற்படுத்த முயற்சி களே செய்யப்படவில்லை' என்று காங்கிரசுக்காரர்கள் பேசிவருகிறார்கள்!

"தென் மாநிலத் தொழில் கமி ஷன் அறிக்கை ஒன்று எனக்கு வந்துள்ளது; அதில், 'பொது, தனியார் துறைகளில் சனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில், கேரளம்—தமி ழகம்—கருநாடகம்—ஆந்திரம் ஆகிய நான்கும் சேர்த்துப் பதிவான தொழில்கள் மொத் தம் 52; அதில் தமிழகத்திற்கு மட்டும் பதிவான தொழில்கள் 21; கேரளம்–ஆந்திரம்—கரு நாடகம் ஆகிய மூன்றுக்கும் சேர்த்துப் பதிவாகியுள்ளவை 23; தொழில்கள்தான்' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது!"

—தொழில் -- கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

(சென்னை 10-வது வட்டப் பொதுக்கூட்டத்தில்)

ஆலைகளின் நெருக்கடி நிலைமை நீங்க தமிழக அரசு நடவடிக்கை

'நேரடி நடவடிக்கைகளில் இறங்க வேண்டாம்'

தொழிற்சங்கங்களுக்கு அமைச்சர் நெடுஞ்செழியன் வேண்டுகோள்

சென்னை, மே 9—

"அவசியமான நடவடிக்கைகளையெல்லாம், மனதாரத் தமிழக அரசு ஏற்கனவே எடுத்துக்கொண்டிருக்கிறது; எனவே, பஞ்சாலைகள் சம்பந்தமாக நிலவி வரும் நெருக்கடி மேலும் மோசமடையாமலிருப்பதற்கு, எவ்வித நேரடி நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாமெனத் தொழிலாளர்களையும், தொழிற் சங்கத் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

"மே 16-ம் நாளன்று மத்திய அரசின் வர்த்தகத்துறை அமைச்சருடன் முதலமைச்சர் அண்ணா அவர்கள், பஞ்சாலைத் தொழில் நெருக்கடி குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தவிருக்கிறார்."

இவ்வாறு, கல்வி – தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளில் கூறியிருக்கிறார். அவர் மேலும் விளக்கியிருப்பதாவது:—

"தமிழ்நாட்டில் — குறிப்பாகக் கோவை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பஞ்சாலைத் தொழில் நெருக்கடி பற்றி அரசு, உன்னிப்புடன் கவனித்து வருகிறது.

"பாதிக்கப்பட்ட ஆலைகளுக்குக் கடன் தரும் பாங்கிகளுக்கு உத்தரவாதம் தரத் தமிழக அரசு முன்வந்திருக்கிறது. அந்த வகையில் ஒன்பது ஆலைகளுக்கு ரூ. 85 இலட்சம் கடனுகத் தரப்பட்டு அந்த ஆலைகள் ஓரளவில் வலுவடைந்து வருகின்றன அதே நேரத்தில் வேறு பல ஆலைகள் பாதிக்கப்பட்டு, மூடப் படும் நிலைமையில் இருக்கின்றன.

"இன்றைய நெருக்கடிக்குக் காரணங்கள் ஆழமானவையாகும். நூல் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது; ஆனால், கைத்தறிகளும் விசைத்தறிகளும் பயன்படுத்தும் நூலின் அளவு குறைந்துவிட்டிருக்கிறது; எனவே, அநேகமாக எல்லாவிதமான நெம்பர் நூல்களும் தேங்கிக் குவிந்திருக்கின்றன.

"தற்போதைய இந்தச் சங்கட நிலைமைக்கு ஏதாவது நிரந்தரப் பரிகாரம் காணும் பொருட்டு, இப்பிரச்சினை குறித்து மத்திய அரசின் அதிகாரிகளுடன் மாநில அரசு விவாதித்தது; கடன் உதவி உட்பட பல்வேறு யோசனைகள் பரிசீலனையில் இருக்கின்றன.

"பல வகையிலும் தமிழக அரசு ஆலைகட்கு உதவிசெய்தே வந்திருக்கிறது. விற்பனை வரி—மின்சாரக் கட்டணம்—அரசுக்குத் தரவேண்டிய கடன் வசூலிப்பு ஆகிய அனைத்தையும் தள்ளி வைத்திருக்கிறது. சில ஆலைகளை ஏற்று நடத்தும்படி மத்திய அரசையும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

"முதலமைச்சர் அண்ணா அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பியவுடன் மத்திய அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்துகிறார். ஆலைகள் பிரச்சினையில் உதவுவதற்காகத் தமிழக அரசு தன்னால் இயன்றவரையிலான பணிகளை ஆற்றிவருகிறது.

"தொழிற்சங்கங்கள்—ஆலை நிர்வாகிகள்—மத்திய, மாநில அரசுகள் ஆகிய நான்கின் ஒத்துழைப்பின் மூலம்தான் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இயலும்.

"எனவே, அவசர நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழக அரசு மேற்கொண்டிருப்பதால், நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமெனத் தொழிலாளர்களையும், எல்லாத தொழிற்சங்கத் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்."

தமிழக மின் குழு

டெண்டர் அறிக்கை

கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி டெண்டர்கள் அடியிற் கையொப்பமிட்டவரால் பரமக்குடியில் உள்ள அவரது செயலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்கூறிய டெண்டர்கள் கீழே குறிப்பிட்டுள்ள முடிவு தேதிகளில் பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்	சாற்றுக் குறிப்பு எண்	பொருள்களின் விவரமும் மற்றும்	முடிவு தேதி
1.	டெண்டர் 1/68–69	இரும்புக் கம்பிகளினால் செய்யப்பட்ட 24' 0'' நீளமுள்ள கிரில் 700 வழங்குவது	11–6–1968
2.	டெண்டர் 2/68–69	தேக்கு மர மீட்டர் பலகைகள் 18''×12''—12000 வழங்குவது	11–6–1968
3.	டெண்டர் 3/68–69	6000 தேக்கு மர மீட்டர் பலகைகள் 24''×18''-ம் 12000 தேக்கு மரப் பலகைகள் 18''×4'' வழங்குவது	11–6–1968
4.	டெண்டர் 4/68–69	400 யூனிட்டுகள் கருங்கல் ஜல்லி ½''×¾'' வழங்குவது	11–6–1968
5.	டெண்டர் 5/68–69	800 "பி" டைப் டிஸ்டிரிப்யூஷன் பெட்டிகள் வழங்குவது	11–6–1968

டெண்டர் படிவங்களின் விலை, ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் தனித்தனியே ரூ. 5·15 (3 சதவிகித வரி உள்பட) ஆகும்.

மேற்படி சாற்றுக் குறிப்புப் பிரதிகள் வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு ரூ. 5·15 வீதம் 'தலைமைக் கணக்கர், இராமநாதபுரம் மின் திட்டம், கோ. புதூர், மதுரை-7' என்ற முகவரிக்குப் பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இந்த ரூ. 5·15 எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. பண அஞ்சல் மூலம் இத்தொகையை அனுப்புவோர் தமது முகவரியையும் தேவையான பிரதிக்குரிய சாற்று எண் குறிப்பையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலம்தான் அனுப்பப்படும். அவை உரியவர்க்குச் சரியாகப் பட்டுவாடா செய்யாமலிருந்தால் அதற்கு மின் குழு பொறுப்பல்ல.

குறைந்தபட்ச விலை குறித்த டெண்டர்தான் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது நிபந்தனையல்ல. கீழே கையொப்பமிட்டவர், எந்த ஒரு டெண்டரையோ அல்லது அத்தனை டெண்டர்களையுமோ காரணம் ஏதும் காட்டாமல் நிராகரிக்கவும் 2 அல்லது மேற்பட்ட டெண்டர்தாரர்களுக்கிடையே ஆணையை (order) பிரித்து கொடுக்கவும் உரிமை பெற்றவர் ஆவார். சாற்றுக் குறிப்புப் பிரதிகள் மாற்றிக்கொள்ளத்தக்கதல்ல. குறித்த காலத்திலும், தேதியிலும் வராத டெண்டர்கள் நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு சாற்று எண் குறிப்பிற்கும் குறிப்பிட்ட ஒரு தொகை டேவணித் தொகையாகக் கட்ட வேண்டும். மேற்படி டேவணித் தொகை டெண்டருடன் கூடவே கண்டிப்பாக அனுப்ப வேண்டும். டேவணித் தொகை கட்டாத டெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவை கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

டெண்டர்கள் 11—6—1968 அன்று பிற்பகல் 4 மணிக்கு பரமக்குடி செயலகத்தில் பரிசீலிக்கப்படும்.

மேற்பார்வை மின் பொறியாளர்,
இராமநாதபுரம் மின் அமைப்பு, பரமக்குடி

நடக்க இருப்பவை

11--5--68

சென்னை 16-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு பிடாரியார் கோயில் தெருவில் (பிரபாத் டாக்கிசுக்கு எதிரில்); தலைவர்: சி. பாண்டுரங்கன்; பேசுவோர்: உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன்., வேலூர் நாராயணன் எம்.சி., நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி, இளம்பரிதி, ஆலந்தூர் பாலன், ந. இராமதாசு, எஸ். கே. லிங்கம், சிக்கந்தர்.

12--5--68

சென்னை 92-வது வட்டம்

அழகிரிபுரம் குடிசை வாழ்வோர் சங்கச் சார்பில் சா. கணேசன் எம்.சி. அவர்களுக்குப் பாராட்டு; மாலை 6-மணிக்கு அழகிரிபுரத்தில் (கோடம்பாக்கம் பவர் அவுஸ் பின்புறம்); தலைவர்: ந. வீராசாமி; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., காஞ்சி மணிமொழியார், நீலநாராயணன், பவளவண்ணன் (துணை மேயர்), சைதை சம்பந்தம் எம்.சி., மற்றும் பலர்.

சென்னை 31-வது வட்டம்

வீராங்கனை வள்ளியம்மை பகுத்தறிவு மன்ற 11-வது ஆண்டு விழா; மாலை 7 மணிக்கு பெரம்பூர் படேல் சாலையில்; தலைவர்: மு. பாலகிருட்டிணன்: பேசுவோர்: கி. மனோகரன் எம்.பி., அப்துஸ்சமது எம்.பி., இரா. சனார்த்தனம், ஆர். வீரமணி பி.ஏ.பி.எல்., வி. தணிகாசலம் எம்.சி.

மின்பாறை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கலைவாணர் திடலில்; தலைவர்: சம்பூர்ணம் சுப்பையன்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., இ. இராமசாமி எம்.எல்.ஏ., ஒ. எஸ். சாமி, மற்றும் பலர்.

செங்கோட்டை

காங்கிரசு ஆளும் ஆந்திரத்தில் ஆதித் திராவிடர்கட்குக் கொடுமை இழைக்கப்படுவதைக் கண்டித்து அனைத்துக் கட்சிக் கூட்டம்; மாலை 7-மணிக்கு; தலைவர்: கா. மு. கதிரவன்; பேசுவோர்: எம். எஸ். சிவசாமி எம்.எல்.ஏ., எஸ். ஏ. முருகானந்தம், எம். எம். பீர்முகமது, எஸ். பாலவிநாயகம், பெப்பின் பெர்னாண்டோ, உத்தமன், கே. ஏ. வனமாலை, சுப்பையா, கணபதிபாண்டியன், ஆலடி அருணா எம்.எல்.ஏ.

குழுக் கூட்டங்கள்

★

"சென்னை 5-வது வட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், 11—5—68 மாலை 6-மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெறும்" என்று செயலாளர் ஆறுமுகம் அறிவிக்கிறார்.

"சென்னை 12-வதுவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், 11—5–68 இரவு 8-மணிக்கு கிளைக்கழகப் பணிமனையில் நடைபெறும்" என்று செயலாளர் அந்தோணி முத்து அறிவிக்கிறார்.

புதிய முகவரி

ஜி பராங்குசம் எம்.எல்.சி.,
தமிழர் செரு,
மேற் கல்கண்டார்கோட்டை,
திருச்சி11

பொதுமறைத் திருநாள்

குருகுலம் திருக்குறள் நிலைய சென்னைக் கிளையின் சார்பில் அழகரடிகள் 65-ம் ஆண்டு வெள்ளணி, பொதுமறைத் திருநாள் 11—5—68 மாலை 6-மணிக்கு மவுண்ட் ரோடு பாலர் அரங்கில் நடைபெறும்; தலைவர்: ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ.; துவக்கி வைப்பவர்: அமைச்சர் மா. முத்துசாமி; வரவேற்பு: ஔவை நடராசன்; பேசுவோர்: டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன், க. அறிவழகன் எம்.எல்.சி., எம். சண்முகசுப்பிரமணியம் எம்.ஏ.எம்.எல்.

மீனவர் பாதுகாப்புக் குழு

மீனவர் பாதுகாப்புக் குழுவின் கட்சி சார்பற்ற பிரதிநிதிகள் கூட்டம், 12—5—68 மாலை 3-மணிக்கு மயிலை தெற்கு மாட வீதி இராஜராஜேசுவரி பாடசாலையில், திரு. என். சீவரத்தினம் தலைமையில் நடைபெறும்.

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

இரா. செழியன் பேச்சு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் ஒத்துக்கொள்ளமாட்டார்; அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியின் 'எகனமிக் ரிவியு' ஏடு, மார்ச் 15 தலையங்கத்தில் எழுதியிருப்பதாவது:—

"இந்த ஆண்டு பட்ஜெட்டால், சாதாரண மக்களுக்கு எந்தவிதச் சாதகமும் கிடைக்கவில்லை; 'நிலைமை மோசமாகுமோ' என்ற பயம் ஓரளவு நீக்கப்பட்டுள்ளது. அன்றாடச் சாமான்களின் விலை குறைந்தால்தான், சாதாரண மக்களுக்கு நன்மை கிடைக்கும்.

"கார்டின் விலையை உயர்த்தியதை எல்லாத் தரத்தினரும் கண்டித்திருக்கின்றனர். மக்களின் மனப்போக்கை அறிந்து, நிதியமைச்சர் ஏதாவது நன்மைசெய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்."

எதிர்க் கட்சிகள் சொல்வதைக் கேட்க மறுக்கும் நிதியமைச்சர், ஆளுங்கட்சியின் அதிகாரபூர்வமான ஏடு கூறுவதையாவது கேட்பாரா என்று தெரியவேண்டும்."

தமிழக மின் குழு

குத்தகை விளம்பர அறிக்கை

"திருநெல்வேலி மின் அமைப்பு—களக்காடு துணை மின் நிலையம்—குடியிருப்பு மற்றும் குடியிருப்பல்லாத கட்டிடங்கள் கட்டுதல்" என்பதுடன் தர விபர எண்ணிக்கை (ஸ்பெசிபிகேஷன் எண்) C. 1041, குத்தகைக்காரரின் பெயர் ஆகியவற்றையும் மேல் உறையில் எழுதி முத்திரை செய்த குத்தகை விபரங்கள் கீழ்க்கண்ட வேலைகளுக்காக, கீழ்க் கையொப்பமிட்டவரால் 22—6—'68 பிற்பகல் 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1) "2 எப்" வகைக் கட்டிடம் — ஓர் அமைப்பு
2) வண்டி நிறுத்தும் கட்டிடம் — ஓர் அமைப்பு

மேற்கண்ட வேலைகளுக்கான எல்லா தர விபரங்களும் வரைபடங்களும் வேண்டுவோர் ஒரு நகலுக்கு விற்பனை வரி உற்பட ரூ. 20 (ரூபாய் இருபது) மட்டும்; குத்தகை விபர அறிக்கை, அட்டவணை மட்டும் வேண்டுவோர் நகல் ஒன்றுக்கு ரூ. 5 (ரூபாய் ஐந்து) மட்டும் செலுத்திக் கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

இலாகா நமூனவில் எழுதாத குத்தகை விபரங்களும், உரிய தேதி - காலம் தவறி வரும் குத்தகை விபரங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கீழ்க் கையொப்பமிட்டவர், வேலைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கும் குறிப்பிட்ட அல்லது எல்லா குத்தகை விபரங்களையும் காரணம் கூறாமல் நிராகரிப்பதற்கும் உரிமை பெற்றவராவார்.

மேற்பார்வை மின் பொறியாளர்,
திருநெல்வேலி மின் அமைப்பு,
திருநெல்வேலி-3

சிற்றூர்--பேரூர்; நகர உட்கிளை--பெருநகர உட்கிளைத் தேர்தல் முடிவு

சிற்றூர் பேரூர்; நகர உட்கிளை–பெருநகர உட்கிளைத் தேர்தல்களின் முடிவுகள் 8—5—68-ஆம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குக் கிடைக்கும் வகையில் அனுப்பப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், சில மாவட்டங்களின் பெரும்பாலான தேர்தல் முடிவுகள், தலைமைக் கழகத்திற்கு இதுவரையில் வந்து சேரவில்லை.

ஆகவே, 13 5—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குக் கிடைக்கும் வகையில் தேர்தல் முடிவுகள் அனுப்பப்பட வேண்டும் என்று இதன்மூலம் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

16 - 5—68-ம் நாளுக்குமேல் கிடைக்கும் தேர்தல் முடிவுகளோ, முடிவுகள் பற்றிய மற்ற விவரங்களோ தலைமைக் கழகத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24 சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.